**செய்தி வெளியீடு எண்: 547** **நாள்: 27.07.2020**

**செய்தி வெளியீடு**

**குறு மற்றும் சிறு தொழில்களுக்கான இலாபத்தை உயர்த்தி தரும் சிக்கன (லீன்) உற்பத்தி நுட்பங்கள் & சிக்ஸ் சிக்மா குறித்து இணைய வலைத்தளத்தின் மூலம் பயிற்சி**

தமிழக அரசின் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது.

தற்பொழுது தொழில் நடத்திக்கொண்டிருக்கும் தொழில் முனைவோர்களுக்காக, **“குறு மற்றும் சிறு தொழில் களுக்கான இலாபத்தை உயர்த்தி தரும் சிக்கன (Lean) உற்பத்தி நுட்பங்கள் சிக்ஸ் சிக்மா (Six Sigma) குறித்து இணைய வலைத்தளத்தின் மூலம் பயிற்சி”** தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வரும் **31.07.2020** அன்று காலை **10.300** மணி முதல் **1.30** மணி வரை நடைபெற உள்ளதால், தொழில் செய்து வரும் தொழில் முனைவோர்கள், வருகை தந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். குறு சிறு நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள் இந்த பயிலரங்கில் கலந்து கொள்வதன் மூலமாக நிரூபிக்கப்பட்ட பயன்களை அளிக்கும், தங்களது தொழிலில் பயன்படுத்த உகந்த சிக்கன உற்பத்தி யுக்திகளை பற்றி அறிந்து கொள்ள முடியும். சிக்கன உற்பத்தி முறைகளினால் விளையும் பயன்கள், செயல் திறன் மற்றும் உற்பத்தி திறன் அதிகப்படுதல், தொழிலாளர்கள் திறன் மேம்படுதல், உற்பத்தி செலவினங்கள் குறைதல், பொருள் வீணாதல் / குறைகள் நீக்கம் / சரக்கு இருப்பு / நிதித்தேவை குறைதல், விலையை உயர்த்தாமலே இலாபம் அதிகரிப்பு பற்றி அறிந்து கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள்.

முன் பதிவு அவசியம்

| | |
|---|---|
| தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032. | 9444556099, 9444557654<br>www.editn.in |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**